உ

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 4 — **February 1942** — **No. 2**

விஷய சூசிகை. பக்கம்

ஹிருத்ரோகம் (பத்திராதிபர்)	1
வைத்யம் (மதுக்கூர் Dr. K ஷாரோடி அவர்கள்)	1—4
ஹிருதயரோக விசாரம் (வடவனூர் டாக்டர் V. N. நாயர் அவர்கள்)	4—20
சித்தர்முறை (பண்டிட் நாராயணய்யங்கார்)	21—24
திருச்சி ஆயுர்வேத ஸபா (காரியதரிசி)	25
ஓர் சந்தேகம் (ஒர் ஹக்கீம்)	25

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள்நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
" " ½-க்கு ரூ 4
" " ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

Editor and Publisher.

No. 2, Police Station West Lane, Madura.

[விலை 0—3—0

ஹிருத்ரோகம் (பத்திராதிபர்)

ஹிருதயரோக விசாரம் என்ற தலைப்புடன் சென்ற சந்திரிகை' யிலும் இந்த இதழிலும் ஸ்ரீமான் வடவனூர் Dr- V. N. நாயர் அவர்கள் சென்ற திராவிட வைத்திய சம்மேளனத்தில் செய்துள்ள வடமொழிப்பிரசங்கத்தைத் தமிழில் மொழிபெயர்த்துத் தொடர்ச்சியாகப் பிரசுரித்துள்ளோம். இன்னும் சில பக்கங்களே மீதியாக இருக்கின்றன. அவையும் அடுத்த சஞ்சிகையில் வெளிவரும். ஆயுர்வேதத்தில் ஹிருதயம், ஆமாசயம், க்லோம, புப்புஸம், என்ற உறுப்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளின் உருவம், இருப்பிடம், தொழில், ஆகிய இவை தெளிவாகக் கூறப்படவில்லை. ஆகவே அவைகளைப்பற்றிபலர் பலவிதமாக அபிப்பிராயப்படுகிறார்கள். அவைகளைப்பற்றி நூல்களும் எழுதியுள்ளார்கள். சிலர் நவீன ஆங்கிலக்கொள்கையை யொட்டி இந்த உறுப்புகளை ஒருவாறு பொருத்தியிருப்பதுடன்புத்தகங்களும் எழுதியுள்ளார்கள் இவைகளனைத்தையும் ஆராய்ந்து நவீனக்கொள்கையில் இருக்கும் விரோதங்களை விளக்கிப் புராதனக் கொள்கைப்படிகீழ்ச் சொன்ன உறுப்புகளை இவ்வியாசத்தில் நிரூபித்துள்ளார்கள். தொண்டைக்குழிக்குக்கீழ் துடங்கி இரைப்பையின் கடைசி பாகம் அதாவது நாபிவளையிலுள்ள பாகத்தில் உறுப்புகள் முழுவதற்கும் ஹிருதயமென்றும் ஆமாசயமென்றும் பெயர். ஆங்கிலத்தில் Heart எனப்படும் பாகமானது ஹிருதய உறுப்புகளில் ஒன்றாகிய ஹிருதயகர்ணிகையாகும். புப்புஸம் என்பது இரைப்பையாகும். க்லோமா என்பது இரைப்பையின் கடைசி பாகத்தில் ஆரம்பித்து சிறுகுடல் ஆரம்பம் வரையில் அமைந்துள்ள ஓர் குழாயாகும். இதற்குத்தான் கிரஹணி என்றும் பெயர். சுவாஸப்பைகள் இரண்டும் ஹிருதயமாகும் ஆகாயத்திலுள்ள வாயுவே பிராணவாயுவாகும். ஓஜஸ் என்பது ரஸதாதுவே. இவ்விஷயம்தான் இவ்வியாஸத்திலுள்ள சுருக்கமாகும் இதை நிரூபிக்கப் பல வசனங்களை ஆதாரமாகக் காட்டியுள்ளார்கள். ஆயுர்வேதத்தில் இது ஓர் விசேஷ ஆராய்ச்சி என்பதை யாரும் மறுக்கமுடியாது. இவ்விஷயங்களில் பண்டிதர்கள் அபிப்பிராயபேதம் கொள்ளுவது இயற்கையே. இவ்வாராய்ச்சியைப் பண்டிதர்கள் பூர்ணமாகப்பரிசீலித்துத் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடவேண்டுமென்பது உபன்யாசகர் அவா.

வைத்யம். (மதுக்கூர் Dr. K. ஷாரோடி அவர்கள்)

பொதுவாக இரண வைத்திய முறைகள், கண், காது, மூக்கு, நாக்கு பல், கண்டர், தொண்டைகளின் பரிகாரங்களும் பெண் களுக்குரிய நோய்கள் பிரஸவ விபரீத விதிகள் சிசுஸம்ரக்ஷணம் மாந்திரீ கோபசாரங்கள், விஷவைத்யங்கள், விருத்தாப்பியத் தடைகள், வீரியவிருத்தி விளக்கங்கள், முதலியன எல்லா வைத்திய நூல்களிலும் காணக்கிடைக்கின்றன. விஸ்தாரமாகத் தனித்தனிக் கிளை நூல்களில் அவை வரையப்பட்டுள்ளன. உலோகங்கள், இரஸோபரஸங்கள், தாது உபதாதுக்கள், ஆகிய வஸ்துக்களை ஔடத ரூபத்தில் உட்கொள்ளச் செய்தது கொண்டது ஆதி முதல் இவ்வறிவாளிகளே. இச்சாஸ்திரத்தில் குறிக்கப்பட் டிருக்கும் சுகாதார முறைகளைக் கைவிடாது நடப்பவர்கள் இஹ லோகபரலோகங்களில் என்னாளும் பூர்ண சுகத்தைப் பெற்றே திருவார் என்பதும் ஆராய்ச்சியினால் தெரியக்கூடும். இந்நாட்களில் காணும் ரூரி வேத முறைகளையும் அந்நாட்களிலறிந்து நிதர்சனப் படுத்தியுள்ளார்கள். நூதன விஷ்காரமான எக்ஸ்ரே பிரயோக க்ஞானம் புத்த காலத்து இங்கு உண்டாயிருந்ததாகவும் அதன் மூல்யம் பல பிரயோஜனங்களையும் வைத்தியர்கள் அடைந்து வந்திருந்ததாகவும் அத்தாக்ஷிகள் இருக்கின்றன. சுருங்கச்சொல்ல இவ்வைத்தியத்தைத் தகுந்தபடி ஆதரிக்குமாகில் அடுத்த சில நாட்களுக்குள் இந்நாட்டில் மட்டுமில்லாது உலகமுழுதும் எவ்விதப் பிணிகளையும் விலக்க வல்லது இவ்வைத்தியம் தான் என்று மூக்க கண்டம் பிரஸ்தாபிக்க எல்லாரும் முன் வருவார்கள் என்று சொல்லத் தயங்கவும் வேண்டுமா? ஹேது விபரீதம், வியாதி விபரீதம், ஹேதுவ்யாதி விபரீதம், ஹேது விபரீதார்த்தகாரி, வியாதி விபரீதார்த்தகாரி, ஹேது வியாதி விபரீதார்த்தகாரி, என்ற முறையனைத்தும் இவ்வைத்தியத்தின் குழந்தைகளென்றே தெரிந்து கொள்ளலாம். இம்முறைகளைத் தவிர வேறு முறைகளில் வைத்தியம் [illegible]டையாது. அம்முறைகள் யாவற்றையும் இந்நூலில் விளங்குகின்றன. [illegible]னால் தான் பூர்ணவியாப்தியை அடைந்துக் கொண்டுள்ளதாய் [illegible]விவரும் பிறவைத்தியங்கள் இந்நாட்களில் கூட சில முக்யவிஷயங் [illegible] அறிந்த மறியாமலும் நம்மாட்களின் உதவிகளை விரும்புவின் [illegible] பழக்கவழக்கமாக நடவடிக்கைகளும் ஏற்பட்டு வருகின்றன.

பக்ஷவாதம் முதலிய வாதரோகங்களிலும் விஷம் போன்ற கடும் தொந்திரவுகளிலும் மாந்திரீக, ரஸாயன, வீரிய விகாரங்களிலும் பிற வைத்தியங்கள் இன்னும் நம்முதவிகளைத் தேடி வருகின்றன. உலகப்போக்கிற்குத் துணையாளாக இவ்வைத்தியம் வேண்டிய அளவில் பூர்ணத்தன்மையுடன் ஏவப்பட்டிருப்பதால் மத்தியில் (16th Century) தேசிய வைத்திய நிபுணரால் முதலாவதாய் கண்டு பிடிக்கப்பட்டதாகக் கூறிவரும் இரத்த ஸஞ்சார விஷயங்கள் (Sir William Harvey) முதலியன இந்நூல்களின் பழைய பஞ்சாங்கமென்று சொல்லத் தேவையிராது. இவ்வைத்தியத்தில் ஔடதங்களின் அளவும் உட்கொள்ளும் காலங்களும் முறைகளும் அதிக விஸ்தார முறையில் கூறப்பட்டுள்ளன. ஸர்வசாதாரணர்கள் கூட இதைச் சுலபமாய்க் கண்டறிந்து கொள்ளலாம். எனினும் ஆராய்ந்து பார்ப்பின் இவ்வைத்தியத்தின் வரலாறுகள் உலக ஸிருஷ்டிக் கொப்பாகும். அல்பாரம்பமாகக் காட்டி ஸமுத்திரம் போல அபார வளர்த்தியைநிருவிக் கடைசியில் குறுகலாக முடியும் தன்மை விளக்கியிருக்கிறது. மேல் வாக்கியங்களினின்றும் இவ் வைத்தியம் உண்மைகளான கொள்கைகளை உடையதென்றும் விஞ்ஞானக் கலைகளின் வழி காட்டியுமெனலாம். இம் முத்தோஷத் தன்மையை உடைய இவ்வைத்தியத்தை பிரம்மம் என்றே சொல்லக் கடமை பெற்றுள்ளோம். (எவ்வஸ்து ஸத்தியமாகவும் விக்ஞான மூலமாகவும் ஸுகத்தைக் கொடுக்குமோ அது பிரம்மம்) திபத்து, சைனு, முதலிய தேசங்களில் நம் தேசத்தை விட அதிக ரீதியில் இக்காலத்தும் இவ்வைத்தியத்தின் வியாப்தி அதிகரித்திருப்பதாய் நாம் கேள்விப்படுகின்றோம். இதன் போதனைகளில் அறிவு எட்டாத பல வித்வான்கள் ஔடதங்களை மட்டில் கைக்கொண்டு வருகிறார்கள். ஆனால் அதுகளின் நிர்மாண முறைகளையோ உட் கொள்ளும் விஷயங்களையோ அனந்தபரிணமங்களையோகண்டறிய கைக்கூடுகிறார்களில்லை. ஆயினும் விதேசியர்கள் பலர் வியாபார தோரணையில் ஔடத விக்ரயம் பண்ணி வருகிறார்கள் என்பதை எல்லோருமறிந்ததாகும் மேலும் பல வித்வான்கள் இவ்வைத்தியத் தைப்பற்றிப் புகழ்ந்துள்ளார்கள். இவ்விதமிருக்கும் இவ்வைத் தியத்தைக்கண்டறிந்து கையாடி வருபவர் பலர். ஒவ்வொருவரும்

பெரும்பாலும்) குருகுல ஸம்பிரதாய முறையில் பல வருடக்காலங்களில் வைத்யத்தைக் கற்றும் அநுபவ முறையில் உணர்ந்தும் முன் வந்துள்ளவர்கள் வைத்யாப்பியாசத்தை நாடிச் செல்லும் சிடர்களை நன்கு பரிசோதனை செய்து முன் பெற்றிருக்கும் ஞானத்தின் திடத்தை முன்னிட்டுப் . போதுமாயின் வைத்யோபதேசத்திற்குத் தகுதியுள்ளவர்களாகக் கருதப்பட்டு வந்திருக்கிறார்கள். இவர்களுக்கு வைத்யோபதேசம் தகுதியாகக் காணப்பட்டு வந்தது. மற்றும் பல சாஸ்திரங்களைக் கற்றறிந்தவன் கூட இச்சாஸ்திரத்தைக் கற்க அஞ்சவேண்டி யிருக்கையில் சாஸ்திரங்களையோ பாஷையையோ அறவேயறியாது குருவினிடத்தோ தோழர்களிடத்தோ அச்சுப்புஸ்தகங்களினின்றோ அபூர்வச்சுவடிகளினின்றோ சில வார்த்தைகளையோ வாக்கியங்களையோ சுலோகங்களையோ பாட்டுக்களையோ கிரகித்து அபூர்வ வழியிலோ உபதேசத்துறையிலோ கிட்டியதாகக் கூறி சில முறைகளை . திறமையாக எண்ணிப் பொருந்த சேர்த்துக் கொள்ளமட்டில் முயற்சித்து வருவது எவவிதம் வைத்திய விருத்தியை விளைவிக்கும்? தன் முறைகளின் பூர்ண விளக்கமோ வைத்திய வரலாறுகளோ இவர்களிடமிருந்தும் தெரிந்து கொள்ள ஹேதுவில்லை. தன் நிமித்தம் எதிராளிகள் கேவலமாக வெண்ண வழி காண்பிக்கலாகிறது. நாகரீகம் நாட்டில் வலுக்க நாள்பட்ட வைத்யத்தின் முன்னேற்றத்தை நவீன முறையில் கொண்டாட வெண்ணி அடிப்படையான ஆதாரங்களை அடியோடு குலைத்து ஆங்கில கியானம் மாத்திரம் அதிக வலு என்று நிர்தாரணம் செய்து அஸல் நூல்களைத் தள்ளி நகல்களைக் கற்கச் செய்து கலப்பு முறையில் குழப்பிக் கொடுத்து தேர்ச்சி செய்ய வைப்பது இந்நாட்டு வைத்யத்தையும் பிற தேச வைத்யத்தையும் அழிப்பதாகுமென உணர்ந்து தகுதியான முறையில் இவ்வைத்தியத்தை முன்னேற்றமடைய முயற்சித்தால் கூடிய சீக்கிரத்தில் என்னாட்டிலும் இவ்வைத்தியத்தைத் தவிர வேறு வைத்திய முறையைக் கையாட விரும்பமாட்டார்கள் என்பது திடமேயாகும். ஸாஹித்யத்திலும் சாஸ்திரங்களிலும் நன்கு அறிவை வளர்த்துக் கொண்டவர்கள்தான் இப்படிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். உதவியாக

ஆங்கில க்ஞானம் உபகாரமுமாகும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பற்பல வைத்திய நூல்களையும் நிகண்டுகளையும் அனுபவ ரூபத்தில் கற்றறிந்து கொள்ளுதல் அவசியம். ஔடத நிர்மாணங்கள், சேர்க்கைகள், உபயோக முறைகள், வகையுறு படிப்பு நாட்களில் தெரிந்து வரவேண்டும். ரோக பரீக்ஷை ரோகி பரீக்ஷை மல, மூத்திர, பஞ்சேந்திரிய பரீக்ஷைகளையும் அனுபவ முறைக்குக் கொண்டு வருவது அவசியம். மற்றும் நூல்களில் விவரித்துள்ள பல நுட்பங்களையும் தெரிவது தேவை. மேலும் தற்போது மங்கலாய் காணும் சிற்சில விஷயங்களை நாகரீக விளக்குகளினால் தெளியவைத்துப் பொங்கச் செய்வதே கடமையாக விருக்க வேண்டும். வைத்தியர்களும் வைத்தியாபிமானிகளும் இவ்வைத்தியத்தை உலகமெங்கும் ஓங்கி நிற்கவேண்டிய வசதிகளை யளிக்க முன் வருவார்களாக. இவ்வைத்தியத்தின் பெருமையையும் தன்மையையும் உணராதார் எளனத்தைத் தான் செய்வார்கள். ஆயினும் அறிவாளிகள் போற்றத்தான் செய்வார்கள் என்பதற்கு கீழ்கண்டவை அத்தாக்ஷிகளாகின்றன. Professor Weber says "In the Vedic Period animal Anatomy was evedently understood thoroughly as each had its own distinctive name. One Chapter of Amerakosa on the human body and its deceases certainly indicates theadvanced cultivation of the medical science The number of medical works and authors is extrodinary large. In surgeory too the Indians seem to have attained special proficiency and in this department European Surgeons might perhaps even at the present day, still learn something from them as they have already borrowed from them the operation of Rhinoplasty"

ஹிருதய ரோக விசாரம். (முன் சந்திரிகை தொடர்ச்சி)

(வடவனூர் Dr. V. N. நாயர் அவர்கள்)

சிலர் "க்லோம என்பது தாகத்தை யுண்டு பண்ணுவது" என்று நூல்களில் கூறப்பட்டிருப்பதால் திரவத்தைப் பெருக்கும்

ஓர் ரஸபிண்டிகா (gland) எனச் சொல்லுகின்றனர். நவீனர்களின் நூல்களில் க்லோம என்பது அக்னி ஆசயம் எனக் கூறப்படுகின்றது. ஆங்கிலத்தில் Pancreas என அழைக்கப்படும் உறுப்பு தான் க்லோம என்பது அன்னோர்களின் அபிப்பிராயம். Pancreas (பாங்கிரியாஸ்) என்ற இந்த ஆங்கிலச்சொல் "பாகக்ரியாசயம்' என்ற வடமொழியை யொட்டிய "பாக்க்ரியாஸ்" (Pagkreas) என்ற கிரீக் சொல்லி லிருந்துவந்ததெனத் தெரிகிறது. ஆகவே Pancreas என்ற உறுப்புக்கு "அக்னி ஆசயம்" என்ற பெயர் பொருந்தமாகின்றது. இதால் Pancreas என்ற உறுப்பு க்லோம எனக்கொள்ள முடியாது. ஏனெனில் க்லோம என்பது தாகத்தை யுண்டு பண்ணுவதாகவும் எள்ளு போன்றதெனவும் வலது பக்கத்தில் அமைந்துள்ளதெனவும் க்லோமாவுக்குச் சொல்லப்படும் லக்ஷணங்கள் பொருந்தாமல் இருக்கின்றன. நூல்களில் கூறப்பட்டுள்ள க்லோமாவின் ஸ்தானத்தை அலக்ஷியம் செய்து கணநாத்ஸேன அவர்கள் க்லோமாவையும் புப்புஸத்தையும் சேர்த்துச் சுவாஸயந்திரத்தில் இருப்பதாகக் கூறுகின்றனர். "ஜிஹ்வாமூல கல க்லோம தாலு தோயவஹா ஸ்ஸிரா:" என்ற இது முதலிய வசனங்களில் ஜிஹ்வா மூலம் முதலிய அங்கங்களுடன் சேர்த்து க்லோமாவைச் சொல்லியிருப்பதால் க்லோமா என்பது கழுத்தின் அடி பாகத்தில் உள்ளே அமைந்துள்ள ஓர் gland ஆக இருக்கக்கூடுமென்று சிலர் க்லோமாவை இன்னும் மேல் ஸ்தானத்தில் இருப்பதாக நினைக்கின்றனர். ஆகவே ஹிருதயத்திற்குக் கீழ் பக்கத்திலோ பார்சுவத்திலோ க்லோமஸ்தானம் என்று சொல்ல முடியாது. "அஸ்தி ஸந்தயோஷ்டாதச கண்டநாடீநிபத்தா ஹிருதய யகிருத் க்லோம நாடீஷு மண்டல ஸம்க்யா:" என்ற வாக்பட வசனத்தில் "கண்டநாடீ" என்பது சுவாஸ யந்திரத்தின் மேல் தண்டு பாகமா (Trachea) அல்லது கோஷ்டத்திற்குச் செல்லும் அன்னநாடியா (Oesophagus) என்ற சந்தேகம் உதிக்கின்றது, அதிலும் எந்த இடத்தில் க்லோம நாடீ எப்படி அமைந்துள்ளதென்பது விளங்கவில்லை. அஷ்டாங்க சாரீரம் என்ற நூலைச் செய்துள்ள P. S வாரியர் அவர்கள் அன்னநாளத்திற்கே "க்லோம என்ற பெயரை யிட்டிருக்கின்றனர். இவ்விதம் பலர் பலவிதமாகப்

பேசியுள்ள இந்த க்லோம என்ற உறுப்பு எங்கு மறைந்திருக்கிற தென்பதை சூக்ஷ்மமாகக் கவனித்து புப்புஸத்துடன் கூட இந்த உறுப்பைத் தெரிந்து கொள்வது இச்சமயத்தில் அவசியமாகும். நவீன ஹிருதயத்திற்கும் சாஸ்திரீய ஹிருதயத்திற்கும் ஸ்பந்தனம்' என்ற தொழில் சமமாக இருக்கின்றது. ஆனால் இடது ஸ்தனத்தின் பக்கத்தில் அறியப்படும் நவீனர்களின் ஹிருதய ஸ்பந்தனம் சாஸ்திரீய ஹிருதயத்தின் அறிகுறியாகக் கொள்ளக்கூடாது. "ரஸவஹஸ்ரோதஸ்ஸுக்களுக்கும் ஓஜோவஹங்களுக்கும் ஹிருதயம் மூலம்" என்ற வசனப்படி சாஸ்திரீய ஹிருதயமும், ரக்தவஹன யந்திரத்திற்கு மூல உறுப்பென நவீனர்கள் சொல்லும் ஹிருதயமும் ஒன்றெனச் சொல்லக் கூடுமாயினும் இதைக் கொண்டுநாம்சாஸ்திரீய ஹிருதயத்தின் ஸ்தானத்தையும் ஸ்வரூபத்தையும் நிர்ணயிக்க முடியாது. ரக்த ஓட்டம் என்பது சரீரமுழுவதும் வியாபித்துள்ள தாகையால் ஓர் குறிப்பிட்ட இடத்தைக் காட்டச் சக்தியற்றதா கின்றது. "ஸத்வம் முதலியவைகளுக்கு இருப்பிடம் ஹிருதயம் என்பதும் "ஜாக்ரத்தசையில் மலருகின்றது. தூக்கத்தில் ஸங் கோசத்தை யடைகின்றது." என்பதும் நவீனர்கள் சொல்லும் ஹிருதயத் தொழிலாகக் கொள்ளமுடியாது. "சுருங்குதல் மலருதல் என்ற தொழில்களுக்குத் தகுந்த அவயவங்கள் அதில் காணப்பட வில்லை. தவிர நவீனர்கள் சொல்லும் தொழிலாக அதைக் கொண்டால் விழிப்பிலும் தூக்கத்திலும் அத்தொழில் சமமாக விருப்பதால் "தூக்கத்தில் சுருங்குதலும் விழிப்பில் மலருதலும்" என்பது பொருந்தாதொழியும். "ஹிருதயம் ஆமாசயத்வாரம்" என்பதைக் கொண்டும் ஹிருதயத்தின் இருப்பிடத்தை அறிய முடியவில்லை. வாய் வழியாக உள்ளே போகும் பிராணவாயுவுக்கு முதல் அவகாசம் ஹிருதயம் என்பது தான் அவ்வசனத்தின் பொருளாகின்றது. "ஆமாசயம்" என்ற உறுப்பும் நவீன மதத் திலும் சாஸ்திரங்களிலும் வெவ்வேறாக இருப்பது பற்றி இதைக் கொண்டு ஹிருதயத்தின் இருப்பிடத்தை யறியமுடியாது. இவ் விதம் நவீனர்கள் சொல்லும் ஹிருதயமும் நூல்களில் சொல்லப் படும் ஹிருதயமும் ஸ்வரூபம், இருப்பிடம், இவை முதலியவை களிலுள்ள வேறுபாட்டால் ஒன்றாக ஆக முடியாமலிருப்பதால்

இரண்டையும் ஒன்று படுத்துவதற்காக நவீனர்கள் படும் பாடெல்லாம் இரண்டையும் வெவ்வேறாகவே நிச்சயிக்கும்படி உதவு கின்றதென்பதை நாம் மறைக்க முடியவில்லை.

நவீன மதத்தையும் பிராசீன மதத்தையும் கற்றறிந்த பண்டிதர்களே? இம்மதங்களில் காணப்படும் யுக்திகளாகிற ஒளியால் அம்மதங்களை யொட்டிய சூக்ஷ்மார்த்தங்களை அறியும் விஷயத்தில் சில அடி தூரமே சென்றிருக்கும் நான் வெகு காலமாக ஆராயப்படாமலும் அறியப்படாமலுமிருக்கும் 'ஹிருதயம்" என்பதை சொல்லத் துணிகிறேனென்பதை நீங்கள் மன்னிக்க விரும்புகிறேன். நான் சொல்லும் விஷயம் நவீனர்களின் கொள் கைக்கு முறண்பட்டதே. பூர்வபக்ஷம், மதாந்தரம், ஆக்ஷேபம், ஸம்சயம், ஆகிய இவை ஓர் விஷயத்தை நிர்ணயிக்கச் சிறந்த உபாயங்கள். ஆகவே நீங்கள் இவ்விஷத்தில் சற்று அவதானம் காட்டும்படி வேண்டுகிறேன். யகிருத், ப்லீஹா, உண்டுகம், இவை முதலியவை போலவே ஹிருதயம், நாபி, ஆமாசயம், பக்வாசயம், என்பன போன்ற சொற்களும் பரிபாஷை சொற்களானதால் மற்றப் பிரசித்தச் சொற்கள் போல அர்த்தத்தைப் போதிக்குமென நினைக்கலாகாது. முற்கூறிய சொற்களுக்கு உபாதி பேதத்தால் பலவிதமாக அர்த்தத்திலும் பேதமிருப்பதை அங்கீகரிக்கவேண்டும். உலக நடவடிக்கைகளிலும் சாஸ்திரங்களிலும் பிரயோகிக்கப் படும் ஹிருதயம், நாபி, முதலிய சொற்கள், ஜடம், சேதனம் உள்ளிருக்கும் பொருள், வெளிப்பொருள் உருவமுள்ளது, உருவமற் றதுமான அர்த்தங்களை போதித்துக் கொண்டு ஒரு சொல் பலஅர்த் தங்களுள்ளதாகக் காணப்படுகின்றது. பிரயோகிப்பவர்கள் நோக்கம், கேட்பவர்கள் நோக்கம், இவற்றை யனுசரித்து மேற்சொன்ன சொற்கள் அந்தந்த உபாதி ஸம்பந்தம் பெற்றுள்ள வஸ்துக்களைப் போதிப்பிக்கின்றன என்று ஏற்பட்ட பிறகு ஷை சொற்களைப்பற்றிய விசாரத்தில் அனைவருக்கும் ஸ்வாதந்திரியம் உண்டென்பது என் எண்ணம். நூல்களில் கூறப்பட்டுள்ள ஹிருதயம்—நவீனர்கள் சொல்லும் க்லோமநாளம், புப்புஸம், ஹிருதயகர்ணிகா, ஆகிய இந்த ஸமுதாயம் அனைத்தும் சேர்ந்துள்ள சுவாஸயந்திரமே நூல்களில்

கூறப்பட்டுள்ள ஹிருதயம் என்ற ஸித்தாந்தம் கொண்டு நிரூபிக்கின்றோம். இந்த ஸமுதாயம் புண்டரீகம் போன்றும் கீழ் நோக்கின முகமுள்ளதாகவும், ஸுஷிரம் அல்லது பொந்துள்ளதாகவும், உச்வாஸ நிவாச்ஸவேகத்தை யனுசரித்து ஸங்கோச விகாஸமுள்ளதாகவும், ஆமாசயத்தின் ஆரம்பப் பிரதேசத்திலிருப்பது பற்றி ஆமாசயத்வாரமெனவும்,பிரத்யக்ஷத்தால் அறியக்கூடியதாகவும்,இருக்கிறது. வெளுப்பு நிறம், மேலே யிருக்கும் தண்டை யொட்டி அநேக இதழ்கள் அமைப்பு, நடுவில் இருக்கும் கர்ணிகையின் சோபை, ஆகிய இவை தாமரை உவமைக்குக் காரணங்களாகின்றன. உள்ளே பொந்தாக இருக்கும் தளங்களின் குவிந்த நுனிபாகம் சுருங்கியிருப்பதால் சிலர் ஹிருதயத்தை மலராத தாமரையுடன் ஒப்பிட்டிருக்கின்றனர். அல்லது மூச்சுக்காற்று வெளியேறும் பொழுது சுருங்குவதைக் கொண்டும் கூடி உவமையைப் பொருத்தலாம். நடுகர்ணிகையாக அமைந்துள்ள (Heart) ஹிருதயம் மஹாமர்மஸ்தானமென்பதும் ஸ்தனம், மார்பு, கோஷ்டம், இவைகளின் நடுவில் அமைந்துள்ளதென்பதும் பொருத்தமாகின்றது. விசித்திர அமைப்புள்ள ஹிருதயத்தின் ஸ்பந்தனம், சப்தவிசேஷம், இவை முதலியவைகள் ஹிருதயத்தை சுவாஸயந்திரமாகச் சொல்லுவதில் விரோதிப்பதில்லை. "பிராணவஹஸ்ரோதஸ்ஸுகளுக்கு ஹிருதயம் மூலம்" என்றும் "பிராணவஹங்களான தமனிகள் ஹிருதயத்தை ஆச்ரயித்திருக்கின்றன" என்றும் கூறும் வசனங்கள் இம்மதத்தில் நன்கு பொருந்துகின்றன. "ரக்தம், கபம், இவைகளின் தெளிவால் ஹிருதயம் உண்டாகிறது" என்ற கர்ப்பாத்யாய வசனமும் மாதாவின் அம்சத்தை யொட்டி யுண்டாவதாகக் கூறப்பட்டிருப்பதால் ஊஹத்தால் சொல்லப்பட்டதெனக் கொள்ளவேண்டும். இவ்விதம் ஸிரை, தமனீ, இவை மிகுந்து கர்ணிகைகளை யொட்டியும் கொஞ்சம் வெளுப்பு நிறத்துடன் பளபளப்பாகவும் மிருதுவாகவும் வழவழப்பாகவும் பச்சையான இதழ்களுடன் கூடியும் அழகாக அமைந்துள்ள இந்த ஸமுதாயம் ரக்த கபங்களின் தெளிவு பாகத்தால் உண்டாகிறதென்பது நல்ல கொள்கையென ஏற்படுகின்றது. புப்புஸம்—இனி புப்புஸத்தை ஆராய்வோம். ஹிருதயத்தின் நாளம், தளம், இவைகளிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்ட க்லோம புப்புஸம் என்றகூறுப்

புகள் எவ்விடத்தில் அமைந்துள்ளன என்பதை ஆராயவேண்டும். ப்லீஹமும் யகிருத்தும் போல இடது வலது பக்கங்களில் க்லோமாவையும் புப்புஸத்தையும் ஒப்புக்கொள்ளாவிட்டால் மஹாப்ராசீரிகா என்ற உறுப்பு ஹிருதயத்தின் கீழ் எல்லை என்ற கொள்கை பொருந்தாமல் போய்விடுமே என்று அஞ்ச வேண்டியதில்லை. மஹாப்ராசீரிகை (Diaphragm) என்பது ஹிருதய குஹையின் கீழ் எல்லை என்று சாஸ்திரங்களில் கூறப்படவில்லை. உதரகுஹையின் உச்சியிலுள்ள மார்பு குஹை முழுவதையும் ஹிருதய குஹையெனக் சொல்லுவது சம்மதமே. மஹாப்ராசீரிகை என்பது ஹிருதய குஹையின் கீழ் எல்லையெனக் கொண்ட போதிலும் குற்றமில்லை. கீழ் எல்லை என்பதால் அதற்குக் கீழில் உள்ள உறுப்புகள் ஹிருதயத்தை யொட்டியவை யென்பது போய்விடாது. அந்த ப்ராசிரிகா என்பது ஹிருதயத்திற்குக் கீழ் குறுக்காக தோரண காரமாகவோ அல்லது மேகலை போன்றோ அமைந்து ஹிருதயத்தின் பின் பாகத்தை ஒட்டித் தொண்டையிலிருந்து கீழ் நோக்கிச் செல்லும் அன்னநாடீ, ஹிருதயத்தை யொட்டி கீழ் நோக்கிச் செல்லும் ஸிரைகள், தமனீகள், ஆகிய இவைகளுக்கு இடமளித்து உபகாரம் செய்கிறதே யன்றி அவைகளைத் தடுப்பதில்லை யென்பது பிரத்யக்ஷ சித்தம். இவ்விதம் ப்ராசீரிகையைத் தாண்டி கீழ் நோக்கிச் செல்லும் அன்னநாடியுடன் பொருந்திய ஓர் தோல் பை Stomach எனப்படுகின்றது. இந்த ஆங்கிலச் சொல் Sto-mach என இரு பதங்களின் சேர்க்கையால் ஏற்பட்டுள்ளது. அவற்றுள் முதல் பதத்திற்கு அப்பிரகாசம் அல்லது பிரகாசமற்றது எனப்பொருள். இரண்டாவது பதத்திற்கு முகமெனப் பொருள். ஆகவே பிரகாசமற்ற முகம் அல்லது வெளிப்படையாகத் தெரியாத முகமென மொத்தக் கருத்தாகின்றது. நாம் உட்கொள்ளும் ஆகாரம் வாயில் மென்று தின்னும்பொழுது சுவல்ப காலம் தங்கி அவ்விடத்திலுள்ள உமிழ் நீர் சம்பந்தம் பெற்றுப் பிறகு இரைப்பையில் கிரமமாக இறங்கி அவ்விடத்தில் சற்று தங்கி க்லேதகம் என்ற கபத்தின் சம்பந்தம் பெற்று இவ்விதம் இரண்டு இடங்களில் தங்கி ஆகாரம் இரண்டு பாகத்தை யடைகின்றது. ஆகவே ஆகாரத்திற்கு இரண்டாவது பாகஸ்தானமாக ஆமாசயத்தில் அமைந்துள்ள இரைப்பையை

(Stomach) வெளிக்குத் தெரியாத முகமென அழைப்பது உசிதமாகின்றது. கோஷ்டத்தில் இருக்கும் 'புபுக்ஷாஸ்தானம்' என இதைத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த இடம் காலியானவுடன் நமக்குப் பசியுண்டாகின்றது. Stomach என்ற இந்த உறுப்புதான் முன்னோர்களால் புப்புஸம் என அழைக்கப்படுகின்றது எனக்கூறுகிறோம். முன்னோர்கள் 'ஆமாசயம்' எனக் கூறுவதின் பொருள் என்னவென்றால் ஹிருதய குழைறயிலுள்ள அவயவங்கள், ஹிருதயச்சுவர், அன்னநாடி, பிராணநாடி, தொண்டை, ஹிருதயம், அதிலுள்ள ரஸவஹஸ்ரோதஸ் ஆகிய இவையனைத்துமே. அவற்றுள் விசேஷித்து நவீனர்கள் கண்டு பிடித்தும் நமது முன்னோர்கள் அங்கீகரித்துமுள்ள (உறுப்பு) புப்புஸம் என்பது Stomach என்பதே. உச்வாஸ நிச்வாஸங்களைப் பிரவர்த்திப்பித்தும் அன்னத்தை உள்ளே செலுத்தியும் வரும் பிராணவாயு ஆமாசயம் ஹிருதயம் ஆகிய இரண்டையும் ஸம்பந்தித்துள்ளது என்பது இவ்விதம் பொருத்தமாகி விடுகின்றது. 'Stomach என்பது ஆமாசயம் எனப்பலர் கூறியிருக்க புப்புஸம் எனச்சொல்லுவது கூடுமோ' என்றும், ஓர் வித சப்தமுள்ளதல்லவோ புப்புஸமாகும். இரைப்பையில் அவ்வித சப்தம் காணவில்லையே யென்றும், சாஸ்திரங்களில் புப்புஸம் என்ற உறுப்புக்கு அன்ன சம்பந்தமோ அல்லது அன்னபாக சம்பந்தமோ கூறப்படவில்லையே யென்றும், கேழ்விகள் இங்கு உதிக்கின்றன. இவைகளுக்குச் சமாதானமாவது— உள்ளிருக்கும் அன்ன சம்பந்தத்தை யொட்டியோ அல்லது அன்ன பாகத்தை யொட்டியோ புப்புஸம் என்ற பெயர் வந்ததாக நினைக்கக் கூடாது. சப்தத்துடன் கூடியது என்பதையும் ஏதோ சில காரணங்களால் அபூர்வமாக உண்டாகும் சப்தத்தை யிட்டும் நிர்வகிக்கலாம். பிரவிருத்தி நிமித்தம் வியவஸ்தையின்றியும் தேசகாலாதிகளான பல உபாதிகளை யொட்டியுமிருக்கின்றது என்பதை ஏற்கனவே கூறியுள்ளோம். கோஷ்டத்தில் அங்கங்களை விமர்சிக்கும் இந்த ஸந்தர்ப்பத்தில் ஹிருதயத்திற்குக் கீழ் இடது பக்கத்தில் இருப்பதாகக் கூறப்படும் ஆமாசய விசேஷமாகிய உறுப்பு புப்புஸமென அழைக்கப்படுவதற்குக் காரணமென்னவெனில் அவ்வுறுப்பு ஒவ்வொரு சமயங்களில் சப்தத்துடன் கூடியிருப்பதும் அபக்வமான

ஆகாரத்துடன் கூடியுமிருப்பதுமே. நூலாசிரியர்கள் அனேகமாக உலக வழக்கிலுள்ள பெயர்களை வேறு பொருளில் உபயோகிக்க மாட்டார்கள். அவற்றின் உருவங்களை போதிப்பதற்காக விசேஷ வர்ணனம் செய்யமாட்டார்கள். "சிரஸ், கண்டம், ஹஸ்தம், பாதம் இவை முதலியன இங்கு உதாஹரணமாகக் கொள்ளலாம். ஆகவே சுசுருத வியாக்யானத்தில் "புப்புஸம் என்பது ஹிருதய நாடியுடன் சேர்ந்தும் புப்புஸம் என்றே ஜனங்களால் அழைக்கப்படுவதுமான உறுப்பு." என்று கூறப்பட்டுள்ளது. "சிரஸ், கண்டம், என்பன போன்ற சொற்கள் குறிப்பிட்ட பொருளை நமக்குச் சந்தேகமின்றி காட்டுகின்றன. புப்புஸம் முதலிய சொற்கள் அவ்விதம் நமக்குச் பொருளைக் காட்டுவதில்லை. இதற்குப் பல காரணங்கள் சொல்லக்கூடும். உபதேச பரம்பரை அற்றுப் போயிருப்பதும், வஸ்து ஸ்வரூபத்தை உள்ளபடி வர்ணியாமல் விடுதலும், உரையாசிரியர்கள் தெளிவாக உரை எழுதாமல் விடுதலும், தேவையான பிரயோஜனத்துடன் நிறுத்திக் கொள்ளுதலும், வேறு பொருளைப் பொருத்தி இரித்துக்கூறுதலும், இவை முதலியவை காரணங்களாகின்றன. நவீனர்கள் சொல்லும் புப்புஸம் சுவாஸயந்திரத்தின் ஓர் தளம் (lungs) ஆக இருந்து பிராணவாயுவின் சம்பந்தத்தால் ரஸதாதுவை அல்லது ரக்ததாதுவைச் சுத்தி செய்வதாக நூல்களில் காணப்படவில்லை. அவ்வுறுப்பு சப்தம் செய்வதென்பதும் பிரத்யக்ஷமல்ல. மூக்கு ஓட்டைகளில் வெளிவரும் சப்தத்தைச் சுவாஸயந்திரத்தின் தளத்துடன் சம்பந்தப்படுத்துவது பொருத்தமற்றதாகும். ஹிருதயத்தின் உள் பாகத்தின் பரீக்ஷையால்புலப்படுவதாகக்கூறில் இது புப்புஸத்திற்கும் பொருத்தமானதே. ரக்தநுரையால் உண்டாகியது என்ற அம்சத்தில் விவாதம் இருக்குமாகில் அப்பொழுது "ரக்த நுரை என்பது என்ன?" என்று கேட்கிறோம். "கர்ப்பத்திற்குக் காரணமான பீஜத்தில் பதுங்கியிருக்கும் ரக்தநுரையானது சுவாஸயந்திர தளங்களுக்குக் காரணம். ஏனெனில் சுவாஸயந்திர தளங்கள் பார்வைக்கு நுரைபோன்று இருக்கின்றன" என்பதும் சரியல்ல. நீங்கள் சொல்லும் புப்புஸமும் நுரை போன்ற எண்ணெயால் பூசப்பட்ட சுவர்களுடன் கூடியிருப்பதால் நுரை போன்ற தோற்றத்தை ஏன் உண்டாக்காது? எவ்விதம் பார்த்தாலும் இந்த

நரை என்ற வாதம் சுவாஸயந்திரத்தின் உபாதான காரணத்தைச் சொல்லுவதில் நோக்கமுள்ளதாகக் காணுகின்றதே யன்றி வஸ்து ஸ்வரூபத்தைக் காட்டுவதில் சக்தியற்றதெனத் தெரிகின்றது. இங்கு நாம் விசேஷித்துக் கவனிக்க வேண்டியதாக இருக்கின்றது. சரகாசார்யர் கோஷ்டாங்கங்களைச் சொல்லும் பொழுது புப்புஸத்தை விட்டு விட்டு ஆமாசயத்தைச் சொல்லியிருக்கின்றனர். சுசுருத வாக்படாதிகளோ வெனில் ஆமாசயத்தைச் சொல்லாமல் புப்புஸத்தைசொல்லியிருக்கின்றனர். ஆகவேஇதைக் கொண்டும் ஆமாசயத்தின் ஓர் அம்சமாகிய Stomach என்பது தான் புப்புஸம் என்ற பெயருடன் நூல்களில் கூறப்பட்டிருப்பதாக நாம் சொல்லுவது உறுதிப்படுகின்றது. பிரசித்தமான ஆமாசய பக்வாசயங்களை யொட்டிய கோஷ்டாங்கங்களைக் கணக்கிடும் பொழுது சரகாசார்யரால் ஆமாசயம் எனச் சொல்லப்படும் உறுப்பு நவீனர்கள் சொல்லும் Stomach என்ற ஆமாசய விசேஷமாக ஆகின்றது. பிரசித்தமான ஆமாசயம் என்பது Stomach என்ற ஆமாசயத்தின் ஓர் அம்சமான உறுப்பைக் காட்டிலும் வேறுபட்டு கோஷ்டம் என்ற பதத்தால் அழைக்கப்படுகின்றது. இவ்விதம் சாஸ்திரத்தாலும் பிரத்யக்ஷத்தாலும் ஹிருதயத்திற்குக் கீழ் இடது பக்கத்திலிருப்பதாகக் காணப்படும் Stomach என்ற உறுப்பு தான் புப்புஸமாக ஆகின்றது என்பது தீர்த்த பொருள். இனி "க்லோமா" என்ற உறுப்பைக் கவனிப்போம். கோஷ்டத்தின் ஓர் அங்கமாகிய க்லோமா என்பது என்ன என்பதை ஆராயவேண்டும். அப்பொழுது தான் ஹிருதயத்தின் இருப்பிடம் முதலியவைகளைச் சொல்லும் சாஸ்திர வசனம் தெளிவுபடும். ஹிருதயத்திற்குக் கீழ் வலது பக்கத்தில் நாம் பார்க்கும்பொழுது நவீன சாரீர மறிந்தவர்கள் Duodenum என்று அழைக்கும் ஓர் உறுப்பு புலனாகின்றது. இந்த உறுப்பு இரைப்பையின் கீழ் உள்ள ஓர் குழாயாகவும் வலது பக்கத்திலிருந்து குறுக்காகக் வந்துள்ளதும் கொஞ்சம் வளைவுடன் கூடியதும் கிரஹணீஸ் தானமாகவும் இருக்கின்றது. இவ்வுறுப்பு தான் நூல்களில் கூறப்படும் க்லோம எனத் தோற்றுகின்றது. மேலேயுள்ள யக்ருத் (Liver) துடன் சேர்ந்துள்ள பித்தப்பை (Gallbladder) யில் சேர்ந்துள்ளதும் பாசகத்ரவம்

முதலிய பெயர்களையுடையதுமாகிய பித்த நீர் ஆமாசயத்தின் பின்புறத்திலுள்ள அக்னி ஆசயத்தின் நாடியில் ஊறுகின்ற அக்னிரஸ (Pancreative juice) த்துடன் கலந்து குழாய் வழியாக வந்து Duodenum என்ற இந்த க்லோமாவின் நடுவிற்கு வந்து அபக்வான்னத்தைப் பாகம் செய்கிறதென நவீன சாரீர விக்யானிகள் கூறுகின்றனர். ஆகாரம் ஆமாசயத்தை யடைந்து அவ்விடத்திலுள்ள திரவங்களால் பாகம் அடைந்து கபதர்மத்தைப் பெற்று ரஸமாக ஆகி இவ்விதம் ஓரளவு பாகமான பிறகு அந்த ஆகாரம் ஸமான வாயுவால் கீழே தள்ளப்பட்டு க்லோமாவை யடைகின்றது. அந்த ஆகாரத்தை ஏற்றுக்கொண்டு அச்செய்கையால் கிரஹணீ என்ற பெயர் பெற்ற பித்ததராகலையானது பித்தத் திரவத்தால் ஓர் பாகத்தைச் செய்கின்றது. ஆகவே அதற்கு "பச்யமானாசயம்" என்ற பெயரும் அந்த க்லோம என்ற உறுப்புக்குப் பொருத்தமாகின்றது. ஜாடராக்னி இருப்பிடம், பித்தமார்க்கம், பக்வாசயத்வாரம் என்ற பெயர்கள் இந்த உறுப்புக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன பித்ததர்மங்கள் நிறைந்துள்ள ரஸத்தை ஆகாரத்திலிருந்து பிரித்து இந்த பைத்திகபாகமானது பக்வாசயத்திற்குச் செலுத்துகின்றது. ஆகவே முக்கியமான பாகக்ரியாசயமென இக்லோமாவைச் சொல்லவேண்டும். க்லோமாவுக்கு வந்து சேரும் பாகத்திரவத்திற்கு அக்னி ஆசயமெனப் பெயரானது கௌணமெனக் கொள்ள வேண்டும். ஹிருதயத்திற்கு மேலே இருக்கும் சுவாஸநாளம் அல்லது அன்னநாளம் இவைகளை க்லோமா என்று ஒப்புக்கொள்ளாவிட்டாலும் "ஸ்வாதுகலோச்சயம்" என்ற மாற்றுப் பெயரையுடையதும் ஹிருதயத்திற்குக் கீழ் பாகத்தில் இருப்பதுமான அக்னி ஆசயத்தை "க்லோமா" என்று ஒப்புக்கொள்ளுவதில் ஆக்ஷேபம் என்னவென்று, கேழ்க்கலாம். நீங்கள் சொல்லும் அக்னி ஆசயத்தை க்லோமாவாக ஒப்புக்கொள்ள முடியாது. ஏனெனில் நூல்களில் க்லோமா வலது பக்கத்தில் இருப்பதாகச் சொல்லப்படுவது விரோதிக்கின்றது குறுக்காக அமைந்துள்ள குழாய் ரூபமான அக்னி ஆசயத்தையே ஷடி ஸ்தான விரோதத்தையும் கவனியாமல் க்லோமா என்று சொல்ல வேண்டுமென்ற பிடிவாதம் எதற்காக? என்று கேழ்க்கிறோம். "திலகம்" என்ற மாற்றுப்

பெயரால் · தோற்றும் ஸ்நேஹனகாரியமும் இந்த உறுப்பைச் சேர்ந்தது என்று தோற்றுகிறது. ஆஹார பாகத்திற்குத் தேவையான தீக்ஷ்ணம், உஷ்ணம், ஸ்நிக்தம், என்ற பித்த குணங்களை நாம் இதில் லக்ஷிக்க முடிகின்றது" என்ற வாதமும் சரியல்ல. அக்னி ஆசயத்திரவத்துடன் சேர்ந்த 'பித்தத்திரவத்திற்கு ஆதாரமாகிய இந்த கிரஹணீ ஸ்தானத்திற்கே இந்த வாதம் மிகப்பொருத்தமாக ஆவதால் இதையே க்லோமா எனச் சொல்ல ஆக்ஷேபமில்லை. நூல்களில் க்லோமா என்பது பிபாஸா ஸ்தானமென இதையே முக்ய லக்ஷணமாகக் கூறியுள்ளார்கள். இந்த லக்ஷணம் கிரஹணீ ஸ்தானத்தில் நன்றாகப் பொருந்துகின்றது. பாகம் நடக்கும் பொழுது உண்டாகும் விதாஹாவஸ்தையால் அடுத்துள்ள தோல் முதலான பிரதேசங்களில் எரிச்சல், காந்தல், சூடு, 'முதலிய இயற்கையை யொட்டிக் காணும் விகாரங்கள் அவைகளைத் தணிப்பதற்காகத் தண்ணீர் தேவை என்கிற பிபாஸையை யுண்டு பண்ணுகின்றன. உடனே நீரை உட்கொண்டால் அந்நீர் அன்னக் குழாய் வழியாக ஆமாசயத்தின் அடிபாகமான பச்யமாசயத்தை யடைந்து தாகத்தின் காரணமாகிய விதாஹத்தைத் தணிக்கின்றது என்று நாம் அநுபவத்தில் காணுகின்றோம். அக்னி ஆசயத்தை (Pancreas) க்லோமா என்று சொல்லுகிறவர்கள் க்லோம லக்ஷணமாகிய தாஹஜனகத்வத்தை நிர்வகிப்பதற்காக அதிக தாகத்தை லக்ஷணமாகக் கொண்ட பிரமேஹ ரோயில் நவீனர்கள் சொல்லும் விகாரங்களைக் கூறுகின்றனர். Substantive observation என்ற திரவ்ய விபாக பரீக்ஷையால் லக்ஷிக்கப்பட்ட விகாரங்களை அவலம்பித்துத் தாகத்தை யுண்டு பண்ணும் தர்மத்தின் சம்பந்தம் பரம்பரையாக இதற்கு இருக்கிறதென்பது நூலாசிரியர்களின் கருத்தெனக் கொண்டால் அப்பொழுது இந்த பரம்பரா சம்பந்தம் எல்லா கோஷ்டாங்களுக்கும் சொல்லக்கூடுமாதலால் எல்லா அங்கங்களுமே க்லோமா என கூறப்படவேண்டி வரும். தர்கம்என்பது இருவகைப்படும். ஆரோக்யநிலைமையில்காணப் படும் குடிநீர் தேவை ஓர் வகையாகும். திரிதோஷப் பிரகோபத்தால் காணும் தர்ஷரோகம் என்பது இரண்டாவது வகையாகும். பிரமேஹத்தில் சொல்லப்படும் தாகம் என்பது முதல் இனத்தைச்

சேர்ந்ததாகும். ஆமாசயத்தின் ஓர் அம்சமாகிய புப்புஸம் புபுக்ஷாஸ்தானமாவது போல க்லோமா என்பது பிபாஸாஸ்தானமாகும். இவ்விதம் க்லோம லக்ஷணமாக நூல்களில் கூறப்படும் பிபாஸாஸ்தானத்வம் Duodenum என்கிற உறுப்பில் பொருத்தமாகின்றது. அக்னி ஆசயமானது கீழ்ச் சொன்ன காரணங்களால் க்லோமாவாகச் சொல்ல முடியாமற்போன போதிலும் அக்னி ஆசயத்திரவம் சேரும் இடத்திற்கு க்லோமா என்ற பெயர் இருப்பதால் அக்னி ஆசயத்தை க்லோமா என்று சொல்லுபவர்கள் ஒருவாறு சந்தோஷிக்கவும். "கண்டநாடியுடன் க்லோம நாடி சேர்ந்திருக்கிறது" என்ற வசனத்தைக் கொண்டு அன்னக்குழாய் தான் க்லோமா என்பவர்கள் க்லோமா என்பது ஆமாசயத்திற்குள் ஓர் ஸ்தானம் பெறவில்லை என்று வருந்தவும் இம்மதம் காரணமாகின்றது. மேலும் ஆகாரத்தை ஏற்பதால் கிரஹிணீ என்றும், பைத்திகமான பாகம் நடைபெறுவதால் பித்தத்தை வகிக்கும் கலையென்றும் பாகம் பெறும் ஆகாரத்திற்கு இருப்பிடமாகையால் பச்யமானாசயம் என்றும், பக்வாசயத்திற்கு உச்சியில் இருப்பதால் பக்வாசயத்வாரம் என்றும், பலதாமாகப் பேசப்படும் இந்த ஓர் உறுப்பு "தாகத்தை உண்டுபண்ணும்" விசேஷத்தை யிட்டு நூல்களில் க்லோமா என்ற பெயரால் அழைக்கப்படுகிறதென்பதில் விரோதம் ஒன்றுமில்லை. புப்புஸம் என்ற பதம் போலவே க்லோம என்ற சொல்லும் லோக வியவஹார சித்தமானப் பிரவிருத்தி நிமித்தத்தை யிட்டு இவ்வுறுப்பை போதிக்கின்றது. Duodenum என்ற பதம் அவ்வுறுப்பின் குணம், தொழில், முதலியவைகளைப் போதிக்காமல் பனிரெண்டு அங்குல நீளமுள்ள ஓர் குழாயை மாத்திரம் போதிப்பதாகச் சொல்லி நவீனர் திருப்தி யடைவது போல "கதி" என்ற அர்த்தமுடைய "க்லு" தாதுவுக்கு "மனின்" என்ற பிரத்யயம் சேர்ந்து காணும் க்லோம என்ற பதம் "கமனகர்த்தா" என்ற பொருளைக் கொடுத்துக் கொண்டு உலக வியவஹாரத்தை யொட்டி ஒரு பிரவிருத்தி நிமித்தத்தால் முன் சொன்ன உறுப்பைப் போதிக்கிறதெனக் கொள்ளுவதில் தடையில்லை. இவ்விதம் பெருந்தன்மை பெற்ற சில பெரியோர்களால் ஹிருதய ஸ்தானத்திற்கு மேலே ஒரு ஸ்தானத்தில் தூக்கிவைக்கப்பட்ட க்லோம, புப்

புஸம், என்ற உறுப்புகளை பிராசீனக் கொள்கைக் கேற்ப நான் இவைகளைக்கீழே ஒரு இடத்தில் வைத்துள்ளேன் என்பதை நீங்கள் மன்னிக்க விரும்புகிறேன். கீழே காட்டியுள்ள ஹிருதய ஸ்வரூபத்தைத் திருடப்படுத்த வேறு வழியாகவும் கொஞ்சம் உபபாதிக்கிறோம். ஹிருதயக் கூட்டின் கீழ் எல்லையானது மஹாப்ராசீரிகா என்ற பெயருடன் குறுக்காக அமைந்துள்ள ஓர் சுவர் தான் என்ற ஊஹம் அசாஸ்திரீயமெனத் தள்ளப்படவேண்டும். ஹிருதயக் கூட்டின் கீழ் எல்லையானது கடைசியாக அமைந்துள்ள மார்பு எலும்புக் குறுத்து எனக் கொள்ளவேண்டும். ஆகவே இந்த இடைவெளியில். இடது பக்கத்திலுள்ளதும் ஆமாசயம் எனப் பெயருள்ளதுமான புப்புஸமும், அதற்குமேல் பிலீஹையும், வலது பக்கத்தில் முன் சொல்லப்பட்ட க்லோமாவும் யகிருத்தும் அமைந்துள்ளன. அந்த இடைவெளியின் நடுவில் ஹிருதயமும் அதன் நடுவில் கர்ணிகை போன்ற ஹிருதய நாபிகந்தமும் அமைந்துள்ளன. சுவாஸயந்திர ரூபமான இந்த ஹிருதயம் உச்சியிலிருந்து ஆரம்பித்து இந்த ஹிருதயத்தின் அவகாசம் வரை வியாபித்தும் பின் பாகத்தில் கழுத்திற்குக் கீழ் காணப்படுவதும் மிருதுவான அஸ்திவலயத்தால் சூழப்பட்டதுமான ஸ்ரோதஸ்ஸால் தரிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பின் புறமாகத் தொண்டைக் குழியிலிருந்து ஆரம்பித்து இரைப்பைக்குக் கீழுள்ள க்லோம வரையில் நீண்டுள்ள அன்னவஹ ஸ்ரோதஸ் காணப்படுகின்றது. இவையனைத்தும் கோஷ்டாங்கங்களில் முக்கியமானவைகளாகவும் ஹிருதயமென்றும் ஆமாசயம் என்றும் பெயர்களைக் கொண்டதாகவும் இருக்கின்றன. சிறுகுடல் முதலியவைகளும் வயிற்று குஹையில் நிலைபெற்ற கோஷ்டாங்கங்களே. ஹிருதயம், வயிறு, இவற்றின் இடைவெளிகளைக் கோஷ்ட பதம் பொதுவில் சொல்லுகின்றது. ஹிருதயக் கூட்டை ஒட்டியும் ஆகாரத்தைப் பெற்று அதை அரைத்து ரஸத்தை யுண்டுபண்ணி அதைக் கொண்டு வந்து சுத்தி செய்து குழாய்களில் செலுத்தி இவ்விதம் தொழில்களில் ஈடுபடுவது போலவே தாதுக்களால் கழிக்கப்படும் அசுத்தத்துடன் கூடிய ரக்தத்தை ஏற்றும் பிராண வாயுவை கிரகித்தும் இடைவிடாமல் வேலை செய்துவரும் இவ்வுறுப்புகள் முக்கியமான கோஷ்டாங்கங்களானது பற்றி நடுவிலமைந்துள்ள

நாபி கர்ணிகையுடன் கூடிய ஹிருதயப் பிராதான்யத்தை யனுசரித்து இந்தக் கோஷ்டப்பாதிக்கு ஹிருதயம் என்ற பெயரையும், அன்ன ரசத்தைப் பக்குவம் செய்யும் யந்திரம் முதலியவைகளும் அதோடு சேர்ந்துள்ள ரஸவஹஸ்ரோதஸ்ஸுக்களும் முக்கியமெனக் கொண்டு இந்தக் கோஷ்டப்பாதிக்கு ஆமாசயம் என்ற பெயரும் நூல்களில் காணப்படுகின்றன. இனி ப்ராணன் அல்லது மூச்சுக்காற்று என்பதைக் கவனிப்போம். ஸமஷ்டி பூத ஸூக்ஷ்மங்களின் குணங்களுக்கு இருப்பிடமாயும் ஆகாயத்தில் வியாபித்தும் ஸமஸ்த ஜீவ ராசிகளுக்கு ஆதார பூதமாகவுமுள்ளப் பிரசித்த வாயுவே பிராணன் எனப்படுகின்றது. சுவாஸயந்திரத்தின் சந்தில் நுழைந்து தன் சம்பந்தத்தாலோ அல்லது ஸாங்கியத்தாலோ ஹிருதயகமலத்துடன் பிணைந்துள்ள ஸப்ததாதுக்களுக்கு ஆகாரமான பரமாணுசத்துக்களைப் போஷிக்கின்றது. "ஆகாயத்திலுள்ள அமிருதத்தை" ப்பானம் செய்கிறது என்று நவீன மதத்தை யொட்டிச் சொல்லப்படும் வாதங்கள் வியர்த்தங்களே. இவ்விதம் பிராண ஸ்ரோதஸ், அன்ன ரஸவஹஸ்ரோதஸ், ஆகிய இவைகளுக்கு மூலமாகவும் பிராண ஸ்தானமாகவும், மூச்சு, ஆகாரம் செலுத்துதல், இவைகளின் ஸ்தான மாகவும் இருப்பது இந்த ஹிருதயம் என்பது மிகப்பொருத்தமாகி விடுகின்றது. ஓஜஸ்—இனி ஓஜஸ் என்பதை ஆராய்வோம். ரஸாதிகளான தாதுக்களின் ஸாரமான தேஜஸ்ஸை ஓஜஸ் என்றும் அது எட்டு அல்லது பத்து பிந்துக்கள் அளவுள்ள தெனவும் சற்று சிகப்பு மஞ்சளான நிறமுள்ள தென்றும் ஸ்வச்சமான திரவ மென்றும் அரை அஞ்சலி அளவுள்ள திரவமென்றும் ஹிருதயத் திலிருப்பதாகவும் நமது முன்னோர்கள் கூறுகின்றனர். கர்ப்பா வஸ்தையிலேயே தாதுக்கள் பெற்றோர்கள் பீஜத்வாரமாக ஒட்டி சரீரத்தில் பரிணமிக்கின்றன. ஷை பீஜத்திலிருந்து ஹிருதயத் திலும் சம்பந்தித்துள்ள மிகஸாரமாகவும் ஸத்வாதி குணங்களுக்கு உபாதி பூதமாகவும் உள்ள ஓர் வஸ்துவே ஓஜஸ் எனப்படுகின்றது. ஹிருதயாதிகளில் வியக்தமாகவும் தாதுக்களுக்கு விஷயமாகவும் இருக்கும் சேதன தர்மத்திற்கு உசிதமான உபாதிஓஜஸ்தானென்றும் பௌதிகமான குருத்வாதிகள் அல்லவென்றும் முன்னோர்கள் அறிந்தார்கள். இடைவிடாமல் பாகத்தை யடைந்தும் ஆமாசயத்

தால் சமர்ப்பிக்கப்படும் அன்னரஸம் ஹிருதயயந்திரத்தில் சுத்தமாகி ரஸவஹஸ்ரோதஸ்ஸுக்கள் மூலமாக தாதுக்களுக்கு அனுப்பப்பட்டும் ரக்தக்குழாய்களால் (தமனிகளால்) ரக்தம் என்ற பெயருடன்வற்றுக் கொள்ளப்பட்டும் வியானவாயுவால் சரீர முழுவதும் செலுத்தப் பட்டும் இருப்பது இந்த ரஸரூபமான ஓஜஸ்ஸே. அது ஹிருதய யந்திரத்தில் தங்கி ரஸத்துடன் சேர்ந்திருக்கும் நிலைமையிலேயே தான் ஓஜஸ் என்ற பெயரை யடைகின்றது. இக்காரணத்தைக் கொண்டு ஓஜஸ்ஸை ஹிருதயத்தில் இருப்பதாக நூல்கள் கூறு கின்றன. ரக்தத்தை யொட்டிய அதன் அம்சம் தாதுக்களுக்கு உபகாரமாகின்றது. ஹிருதயத்தை ஆச்ரயித்துள்ள ஓஜஸ்ஸை யொட்டி மனது, புத்தி, ஆயுஸ், ஸுகம், துக்கம், மோஹம் முதலியவைகள் இருக்கின்றன. ஆகையால் தான் ஹிருதயமானது ஓஜஸ்ஸின் சம்பந்தத்தால் ஸுகாதிகளின் அபிவியக்திக்குக் காரண மெனப்படுகின்றது. அன்னபானமின்றியே ஜீவன் உயிருடன் இருப்பதும், மூச்சு விடாமலே சில காலம் ஜீவன் உயிருடன் இருப்ப தும் ஹ்ருதயத்திலுள்ள இந்த ஓஜஸ்ஸின் மகிமையாகும். திரிகுணாத் மகமானதேஜோரூபமாக இது இருந்த போதிலும் பிந்துக் கணக்கைச் சொல்லவேண்டியிருந்ததாலும்,ஸர்வப்ரபஞ்சத்திற்கும்ஆதாரமாயும் முதலில் அவதரித்தும் ரஸமென்ற பெயருடன் சுருதிகள் போதித் துமுள்ள ஜலதாதுவின் வியஷ்டிகளிலுள்ள அம்சமாகிய ஓஜஸ்ஸை திரவமென்று அழைப்பதிலுள்ள ஔசித்யத்தாலும் இதைத் திரவ மென நூல்கள் கூறுகின்றன. ஹிருதயத்தின் விரிதலும் சுருங்கு தலும்—நூல்களில் 'ஹிருதயம் விழிப்பு காலங்களில் விகஸிப்பதாக வும் நித்ரையில் சுருங்குவதாகவும்' கூறப்பட்டிருப்பதை இப்பொழுது ஆராய்வோம். நிமீலனம் என்ற பதத்திற்கு எதிராக உபயோகிக்கப் பட்டிருக்கும் விகாஸம் உன்ற பதம் உன்மீலனம் என்ற அர்த்தத்தைக் கொடுக்கின்றது. உன்மீலனம் நிமீலனம் என்ற இந்த இரண்டும் மனிதன் விழித்திருக்கும் பொழுதும் தூங்கும் பொழுதும் கண்களில் நாம் பிரத்யக்ஷமாக அறிகிறோம். தூங்கு கிறான் என்று சொல்ல வேண்டிய சமயங்களில் "நிமீலதி" என்று உலக வியவஹாரத்திலும் காணுகின்றோம். தூக்கமயக்கத்தை முதலில் நாம் மனதிலும் பிறகு இந்திரிய கோளங்களிலும் அனுப

விக்கிறோம். இவ்விதம் மனதின் விகாஸமும், சுருங்குதலும் என்ற விஷயங்களை ஹிருதயத்தில் அனுபவிப்பதை இங்கு சொல்லுகிறோம். ஹிருதயம் தான் மனது என்பதற்கு ஸ்தானமென ஸகல நூல்களும் கூறுகின்றன. நவீனர்கள் சொல்லும் மூளை என்ற மதத்தைக் காட்டிலும் முன் சொன்ன மதமே சிறந்ததென்பதை இங்கு விவரிக்கப் பெருகுமாதலால் சொல்லவில்லை, மீலனம் என்பது மனோவிலயம். மனதின் மீலனம் அதன் உபாதியாகிய ஹிருதயத்தில் வியவஹாரத்திற்காகக் கல்பிக்கப்பட்டது என்பது ஸ்பஷ்டம். மூளையைப் புத்தி ஸ்தானமாகக் கல்பிக்கும் நவீனர்களும் நித்ராகாலத்தை யொட்டி வரும் மனோலயத்தை அனுசரித்த நிமீலனம் போன்ற ஓர் விகாரமோ அல்லது விசேஷமோ மூளையில் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். நித்ரையை விஷ்ணு மாயையென வர்ணிக்கும் அடுத்த வாக்கியத்தால் இந்த நிமீலனம் உன் மீலனம் இரண்டும் பிரத்யக்ஷமாக அறியக்கூடியவையல்லவென்பது வெளிப்படுகின்றது.

ஹிருத்ரோகம்—கீழே விவரித்ததுபோக மீதியுள்ள ஹிருதய சம்பந்தமான விஷயங்களை இனி சொல்லப்போகும் ஹிருதயரோக உபன்யாசத்தில் சொல்லுகிறோம் ஹிருத்ரோக ஸம்பிராப்தி அடியில்-காணுமாறு நூல்களில் சொல்லப்படுகின்றது. “தூஷயித்வா ரஸம் தோஷா விகுணா ஹிருதயம் கதா: । ஹிருதி பாதாம் ப்ரகுர்வந்தி ஹிருத்ரோகம் தம்ப்ரசக்ஷதே ॥” பிரகோபத்தை யடைந்து திரிதோஷங்கள் ரஸதாதுவைக் கெடுத்து ஹிருதயத்தை யடைந்து ஹிருதயத்தில் தொந்திரவுகளை யுண்டுபண்ணுகின்றன. அவைகளை ஹிருத்ரோக மென்கின்றனர் என்பது இவ்வசனத்தின் பொருள். ஆரோக்ய நிலைமையில் சரீரத்தில் ஏற்படும் ரஸபரிணாமாதிகளை நவீன மதப்படி முதலில் விவரிக்கின்றோம். உட்கொள்ளும் ஆகாரத்தைப் பிராணவாயு இரைப்பைக்குச் செலுத்துகின்றது. இரைப்பையின் சுவர்களில் ஸமான வாயுவின் வியாபாரத்தால் ஓர் அசைவு உண்டாகின்றது. அதால் ஊறுகின்ற இரைப்பையின் திரவங்கள் ஆகாரத்துடன் கலந்து அதைநையச்சிதைத்துவிடுகின்றன இது இரண்டாவது பாகமெனலாம். இது நவீந மதத்தையொட்டிச்சொல்லப்படுவதாகும். ஆகாரத்தை வாயில் போட்டுமென்று தின்னும்பொழுது வாயிலுள்ள

உமிழ் நீருடன் கலந்து போவதை முதல் பாகமென்பர். இந்த இரண்டு பாகத்திற்கும் காரணமான பித்தத் திரவங்களை நமது நூல்கள் "க்லேதகம்" என்ற ஒரு பெயரால் அழைக்கின்றன. இரைப்பையிலிருந்து கீழே சென்று புளித்து கிரஹணியில் தங்கி பித்தத்திரவத்துடன் சம்பந்தித்து பாகம் பெறுகிறதென்பதை ஏற்கனவே சொல்லியுள்ளோம். இவ்விதம் பாகமாகும் ஆகாரத் திலிருந்து பெருகும் ரஸம் கோஷ்டத்தின் உள் சுவர்களை அடைந் துள்ள மயிர் போன்ற மெல்லிய குழாய்களால் உறிஞ்சப்பட்டு ஹிருதயத்திற்குச் செல்லுகின்றது. இந்த அன்ன ரஸத்தில் சீதம், ரூக்ஷம், லகு, (முதலிய வாதகுணங்களும்) உஷ்ணம், ஸ்நிக்தம், தீக்ஷ்ணம் (முதலிய பித்தகுணங்களும்) மந்தம், ஸ்திரம், குரு, (முதலிய கபகுணங்களும்) முதலிய வெவ்வேறு குணங்கள் அவை களுக்கு ஆச்ரயமான பூத ஸூக்ஷ்மங்களுடன் சேர்ந்து கிரமமாக வாதம், பித்தம், சிலேஷ்மம், என்ற பெயரால் நூல்களில் பெயரிடப்பட்டு இயற்கையான சமரஸத்தன்மையால் ஆரோக்ய ஹேதுக்கள் ஆகின்றன. திரிதோஷங்களின் இந்த நிலைமையைத் தான் நூல்கள் சம நிலைமை என்கின்றன. அபத்யமான ஆஹாரம் முதலியவைகளால் ஆகார பாகத்தொழிலில் ஏற்படும் வைஷம்யத்தால் இந்த அன்னரஸம் பாகத்தை யடைவதில்லை. அல்லது விஷமமாக பாகத்தை யடைகின்றது. அதாவது இந்த ரஸத்தில் ஸப்த தாதுக்களுக்கும் ஆஹாரம் அல்லது போஷகமாகிய பூதகுணங்களின் சம்பந்தம் குறைந்தோ அதிகமாகவோ, அல்லது விபரீதமாகவோ ஆகிவிடுகின்றது. இயற்கையான ரூக்ஷாதி குணங்களின் அளவு மாறிவிடுகிறதென்பது இதன் பொருளாகும். இவ்விதம் அபக்வ மாயும், விகிருதமாயும், விகுணமாகவும், இருக்கும் இந்த நிலைமையில் இந்த அன்னரஸம் துஷ்டமெனச் சொல்லப்படுகின்றது. சீதாதி குணங்கள் மிகுந்தாலும், உஷ்ணாதி குணங்கள் மிகுந்தாலும், மந்தாதி குணங்கள் மிகுந்தாலும் பிரகோபப்பிரகாரத்திலுள்ள தாரதம்யத்தை யொட்டி கிரமமாக வாத பித்தகபங்களின் பிரகோப மென்றும் இவைகளால் அன்னரஸம் தோஷமடைகிற தென்றும் நூல்கள் கூறுகின்றன. இங்கு பிரகோபத்தை யடைந்த தோஷங்கள் ரஸத்தைக் கெடுத்து ஹிருதயத்தை அடைகின்றன" என்று கூறப்படுகின்றது. (தொடரும்)

சித்தர் முறை. (பண்டிட் நாராயணய்யங்கார்)

தாளகபஸ்மம்—(2) சுத்தி செய்த தாளகத்தைக் குதிரை லத்திச் சாற்றில் ஏழு பாவனை செய்து பிறகு பில்லைதட்டி ஓர் மண் சட்டியில் பாதியளவு குதிரை லத்தியை யடைத்து அதில் அந்த பில்லையை வைத்துப் பிறகு மேலும் குதிரை லத்தியைப் போட்டுவாய்க்கு அகல் மூடி சந்துவாய்க்குச் சீலைமண் செய்துகாய வைத்து கஜபுடமிடவும். ஆறவிட்டு எடுக்க பஸ்மமாகும். குறிப்பு—தாளகக்கட்டியின் அடியில் ஓர் அப்பிரகத்தகட்டையும் கட்டிக்குமேல் ஓர் அப்பிரகத்தகட்டையும் வைத்துக் கொண்டு குதிரைலத்தியாலடைத்துப்புடமிட்டால் லத்திச்சாம்பல் கலக்காமல் தாளகபஸ்மத்தை எடுத்துக் கொள்ளலாம். கஜபுடமென நூல்களில் கூறப்பட்டாலும் வராஹபுடம் போடுவது சரியாக விருக்கின்றது. முன் சொன்ன பஸ்ம முறையை விட இது உத்தமமாகும் தாளகபஸ்மம்—(3) சுத்தி செய்த தாளகத்தை ஓர் மண் வாணலியில் வைத்து அடுப்பேற்றி வெங்காயச்சார் அரைப்படி சுருக்கு கொடுத்துப் பிறகு அந்த தாளகத்தை வெங்காயச்சார் விட்டு அரைத்து பில்லை தட்டி காயவைத்து அந்த பில்லைக்குமேல் 7–8 விரிசை துணி சுற்றி முழ உயரம் உமி கொட்டி உமியின் நடுவில் அதை வைத்து நெருப்பிட தாளகம் உருகி உமியின் மேல் குருணை போல் படியும். அதை எடுத்துச் சாம்பல் நீக்கி கல்வத்திலிட்டுப் பொடிசெய்து அரிசியிடை தேன் முதலிய அனுபானங்களில் ஆறு வேளை கொள்ள காசம் நீங்கும். அவசியமானால் சில நாள் விட்டு மறுபடியும் ஆறு வேளை உபயோகிக்கவும். இது சற்று கடுமையான குணமுள்ளது. தாளகபஸ்மம்—(4) ஒரு பலம் சுத்தி செய்த தாளகத்தைச்சோற்றுக்கற்றாழைரஸத்தால்அரைத்து உலர்த்தி ஓர் சட்டியிலிட்டு மேல் சட்டி மூடி 12 யாமம் எரிக்க பஸ்மமாகும். தாளகபஸ்மம்—(5) தாளகத்தை அரசம்பட்டை கஷாயத்தில் இருபது பாவனை செய்து பிறகு பில்லை செய்து காய வைத்து ஓர் சட்டியில் பாதிவரை அரசம்பட்டை சுட்ட சாம்பல் போட்டு அதன் நடுவில் பில்லையை வைத்து மேலே சாம்பலால் சட்டியை நிரப்பி வாய் மூடி சீலை செய்து காயவைத்துக் கஜபுட

பஸ்மமாகும். (6) தாளகம் ஓர் இடை, ஓட்டடை இரு இடை எடுத்து ஓர் சட்டியில் பாதியளவு அரசம்பட்டைச் சாம்பல் போட்டு அதன்மேல் ஓட்டடைப் பொடியில் பாதி பரப்பி அதில் தாளகத்தை வைத்து அதன்மேல் மீதி பாதி ஓட்டடைப் பொடியைப் போட்டு அதன்மேல் சாம்பலைச் சட்டி நிறையகொட்டி மேல் மூடி நான்கு யாமம் எரித்து ஆறவிட்டு எடுக்கப் பஸ்மமாகும். தாளகபஸ்மம்—(7) தாளகத்தைத் தும்பைச்சாற்றில் ஏழு நாள் அரைத்து உலர்த்தி ஓர் சட்டியில் போட்டு வாய்க்கு மூடி சீலைமண் செய்து காயவைத்து அடுப்பேற்றி எட்டு யாமம் எரித்து அதை எடுத்து அதே சாற்றால் மூன்று நாள் அரைத்து மறுபடியும் முன் போல எரிக்கவும். இவ்விதம் ஏழு தடவை எரிக்கத் தாளகம் மேல் பதங்கிப்பது நின்று சட்டியின் அடியில் தங்கிவிடும். பிறகு எருக்கம்பாலால் ஒரு நாள் அரைத்து முன் போல எரிக்கவும். இது கலத்குஷ்டம், வீக்கம், வாதரக்தம், முதலியவைகளைப் போக்கும். பிரங்கம் என்ற Syphilis நோயில் மிகுந்த நன்மை செய்யும். தாளகபஸ்மம்—(8) தாளகத்தை வெள்ளைச்சாரணத்தி கஷாயத்தில் ஒரு நாள் அரைத்து அதை மூடிய உருண்டை அல்லது பில்லையாகச் செய்து வெய்யிலில் நன்றாகக் காயவைத்து ஓர் சட்டியில் பாதியளவு ஷெடி சாரணத்திச் சாம்பலைப் போட்டு அமுக்கி அதன் நடுவில் அந்தத் தாளகப்பில்லையை வைத்து அதன் மேல் சட்டி நிறைய ஷெடி சாம்பலைக் கொட்டி வாய் மூடி சீலைமண் செய்து உலர்த்தி காடாக்னியாக ஐந்து நாள் கைவிடாமல் எரிக்கவும். ஆறவிட்டு எடுக்கப் பஸ்மமாகும். இது பாவப்பிரகாசம் என்ற நூலில் சொல்லப்பட்ட முறை. இதைப் பல தடவைகளில் நாம் செய்து அனுபவித்திருக்கிறோம். விஸர்ப்பம், மண்டலம், குஷ்டம், பிரங்கநோய், (இதைத் தமிழில் பரங்கிநோய் என்பர்) முதலிய நோய்கள் நீங்கும். இந்த ஒரு மருந்தைச் சரியாக முடித்துத் தகுந்த அனுபானத்துடன் உபயோகிக்கப் பல நோய்கள் விலகும். இது உத்தமமான முறை. க்ஷயம், காசம், முதலிய சகல ரோகங்களையும் விலக்கும். குறிப்பு—தாளகபஸ்மம் எந்த முறைப்படி செய்த போதிலும் வேளைக்கு இரண்டு அரிசியிடைக்கு மேல் உபயோகிக்கக்கூடாது. சில சரீரக்கூறுகளை யொட்டி அதிக

அளவிலும் உபயோகிக்கலாம். சிலர் தாளகபஸ்மம் செய்வதாகச் சொல்லி ஏமாற்றுவதுண்டு. அதாவது தாளகத்தையும் சீனிக்காரம் (இதுவே படிகாரம் எனப்படும்) என்ற கடைச்சரக்கையும் சேர்த்து ஏதாவது ஓர் ரஸம் விட்டு அரைத்துக் காயவைத்து அகலில் வைத்து மூடி சீலைமண் செய்து கஜபுடம் இட தாளகம் நெருப்பில் போய். சீனிக்காரம் மாத்திரம் பஸ்மமாகும். அது மிகவும் வெளுப்பு நிறத்துடன் புரைபுரையாகக் காணும். இதைத் தாளகபஸ்மமெனச் சொல்லிக் கொடுப்பதுண்டு. உண்மையில் இந்த பஸ்மமும் சில நோய்களை அரிசியிடை அளவில் உட்கொண்டால் விலக்குகின்றது. இது மோரே சுவார் என்ற ஒரு வைத்தியர் நூலில் காணுகின்றது. தாளகபஸ்மம்—(9) புரசம்பட்டைச் சுட்டுச் சாம்பலாக்கி அச்சாம்பலை ஓர் சட்டியில் பாதி வைத்து அதன் நடுவில் தாளகத்தை வைத்து மேல் சாம்பல் கொட்டி வாய் மூடி ஒரு நாள் எரிக்கப் பஸ்மமாகும். குறிப்பு—தாளகத்தை இவ்விதம் எரிப்பு முறைகளில் பஸ்மம் செய்வது தான் உத்தமம். புடமிடுவதால் பஸ்மமாகிய போதிலும் குணமற்று விடுகின்றது. தாளகபஸ்மம்—(10) தாளகத்தைச் சுண்ணாம்பு நீரால் அரைத்துக் காயவைத்துப் பிறகு நாயுருவிசமூலம் சுட்டுச் சாம்பல் செய்து அதில் ஜலத்தை விட்டுத் தெளிவு இறுத்து அந்தத் தெளிவு நீரால் அரைத்துப் பில்லை தட்டிக்காயவைத்துப் பிறகு ஓர் சட்டியில் பூசணிக்கொடியை உலர்த்திச் சுட்டுச் சாம்பலாக்கி அந்த சாம்பலை பாதியளவு கொட்டி அதன் நடுவில் யவக்ஷாரத்தையும் பொடி செய்து பரப்பி அதில் ஷை பில்லையை வைத்து மேலும் யவக்ஷாரத்தூள் பில்லைக்குப் பரப்பி அதன் மேல் ஷை சாம்பலைச் சட்டி நிறையக் கொட்டி வாய் மூடி 12 மணி அடுப்பேற்றி காடாக்னியாக எரித்து ஆறவிட்டு எடுத்து முன் போல உபயோகிக்கக் குஷ்டம் முதலியவை நீங்கும். குறிப்பு—நூல்களில் சட்டியின் அடியில் யவக்ஷாரம் பரப்பி அதன் மேல் பில்லையை வைத்து அதன் மேல் யவக்ஷாரம் பரப்பி அதன் மேல் சட்டி நிறையச் சாம்பலைக் கொட்டி எரிக்கும்படி காணப்படுகின்றது. இம்முறையில் சில அசௌகரியமிருப்பதுபற்றி மேல் சொன்ன

விதமாகச் செய்வது வழக்கம். இதுவும் உத்தமமான முறை. தாளகபஸ்மம—(11) பூசனிரஸத்தில் தாளகப் பொடியைப் பாவனை செய்து பிறகு காடி அல்லது எலுமிச்சம்பழ ரசத்தில் பாவனை செய்து பிறகு சுத்த நீரில் கழுவி உலர்த்தி ஓர் மண் சட்டியின் நடுவில் அத்தாளகத்தை வைத்து மேல் சட்டி மூடி இலந்தைத்தழையை அரைத்து அந்த விழுதால் சந்து வாய் மூடி அடுப்பேற்றி அடிச்சட்டி சிவக்கும் வரையில் எரித்து ஆறவிட்டு எடுத்துப் பார்க்கமாணிக்யம் போல சிவந்த நிறமான சிந்தூரம் காணும். வாதரக்தம், பகந்திரம், புரையோடும் புண்கள், குஷ்ட நோய்கள்,முதலியன விலகும். இதற்கு ரஸமாணிக்யமெனப் பெயர். இதுவும் உத்தமமான முறை.

6. மனோசிலை—இது கடைகளில் எங்கும் கிடைக்கும் சரக்கு. இச்சரக்கு சிகப்பாக விருக்கும். மிகவும் சிகப்பாக விருப்பதாகப் பார்த்து எடுத்துக் கொள்ளவேண்டும். இது தனித்தும் கூட்டு மருந்துகளுடனும் உள்ளுக்கு உபயோகமாகின்றது. தமிழ் நூல் களில் இதன் உபயோகம் அதிகமாகக் கூறப்படவில்லை. வடமொழி நூல்களில் பல கூட்டு மருந்துகளில் இது சேருகின்றது. இது காஸம், க்ஷயம், காய்ச்சல், இவைகளில் விசேஷித்து குணம் கொடுக்கின்றது. தாளகத்திற்கு அடுத்தபடியாக இதைச் சொல்லலாம். மனோசிலை சுத்தி—இதைப் பொடி செய்து அகத்தி ரஸத்தால் ஏழு பாவனை செய்து உலர்த்தவும். சுத்தியாகும். மனோசிலை சுத்தி—இஞ்சி ரஸத்தால் முன் போல பாவனை செய்யச் சுத்தியாகும். தாளகத்தைப் போலவே இதையும் எரித்துப் பஸ்மம் செய்து கொள்ளலாம். தாளகத்தின் அளவு போலவே இதையும் உள்ளுக்கு உபயோகிக்கவும். தேன் அனுபானம் அல்லது தகுந்த அனுபானத்தில் கொடுக்கலாம். இரண்டு அல்லது மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக உபயோகித்தாலும் துர் குணம் இருப்பதில்லை. கூட்டு மருந்துகளில் பஸ்மம் செய்து சேர்ப்பதில் நல்ல குணம் காணுகின்றது.

திருச்சி ஆயுர்வேத ஸபா.

ஷை ஸபாவின் மாதாந்தக்கூட்டம் 25–1–42உ மாலை 4மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டிடத்தில் நடைபெற்றது. ஸ்ரீ P. G. கணபதி சாஸ்திரிகள் தலைமை வஹித்தார்கள். ஸ்ரீ T. V. ஜயராமசாஸ்திரிகள் அவர்கள் "ராஜயக்ஷ்மா" என்ற விஷயத்தைப் பற்றி உபன்யஸித்தார்கள். மாலை 6-30.மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

V. R. Subramania Ayyar,
காரியதரிசி.

ஓர் ஸந்தேகம்.

சித்தர் முறையில் கூறப்பட்டுள்ள கந்தகமுறைகளை எவ்வளவு காலம் உபயோகிக்கலாமென ஓர் ஹக்கீம் நண்பர் நமக்குக்கடிதம் எழுதியிருக்கின்றனர். முறைப்படி தயாரித்தகந்தகத்தைச் சில ரோகங்களில் விடாமல் தினம் இரு வேளையாக இரண்டு மாதம் உபயோகித்திருக்கிறோம். துர்க்குணம் சற்றும் இல்லை. தவிர சிறு குழந்தைகளுக்கும் அவ்வளவு காலம் உபயோகித்தும் இருக்கிறோம். இம்முறைப்படி தயாரித்த கந்தகம் சற்றும் துர்குணம் உண்டுபண்ணுவதில்லை. ஆனால் சிலர் வேறு முறையில் தயாரித்த கந்தகத்தைச் சாப்பிட்டுச்சில நாட்களில் துர்குணம் நேர்ந்திருப்பதை நேரில் அறிவோம். (பத்திராதிபர்)

ஓர் அறிக்கை

வைத்திய சந்திரிகையில் சில மாதங்களுக்கு முன் வெளிவந்த ஔஷதசாரம், வைத்யசாரம், இவைகளைத் தொடர்ந்து மேலும் வெளியிடும்படி சில நண்பர்கள் கடிதம் எழுதியிருக்கின்றனர். ஷை நூல்கள் வெளி வந்தபொழுது சித்தர் முறையை வெளியிடும்படி சிலர் தூண்டியதால் இதை வெளியிடும்படியாயிற்று. சில மாதங்களில் சித்தர் முறை முடிந்து விடுமாதலால் அது முடிந்தவுடன் முன் நூல்களை வெளியிடுவோம். (பத்திராதிபர்)

Registered No. M. 4018.

"Wanted 30 paid agents in Madura District" on a salary of Rs. 30-2½-50 per mensem under **P. A. Ramaswami Iyengar**, Branch Manager of the Indian Investment Trust Limited, Ottapalam.

Apply to:-**P.A.Ramaswami Iyengar,**

Branch Manager,

Indian Investment Trust Limited,

Door No. 7,

No. 2, Police Station West Lane,

Madura.

ஸஹஸ்ரயோகம்.

இது மலையாள தேசத்தில் பிரசித்தமான ஓர் வட மொழி வைத்ய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. இந்நூலை யனுசரித்தே மலையாளத்தில் மருந்து முறைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நூலில் கஷாய முறைகள் 184, கிருதமுறைகள் 70, தைலமுறைகள் 85, சூர்ண முறைகள் 89, லேகியமுறைகள் 20, குளிகைமுறைகள் 73, ஜன்னிமருந்துசள் 75, கண்ணோய்களுக்கு மருந்துகள் 92, காதுநோய்களுக்கு மருந்துகள் 6, மூக்குநோய்களுக்கு மருந்துகள் 6, முகரோக மருந்துகள் 3, தொண்டை நோய்களுக்கு மருந்துகள் 6, உள்வாய் ரோகங்களுக்கு மருந்துகள் 5, பலவகை மருந்துகள் 153 ஆக இவ்விதம் மொத்தம் 867 மருந்துகள் விபரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஒரு நூலே வைத்யர்களுடைய தேவைக்குப் போதுமானது. புத்தகம் விலை ரூ. 1 தபால் கூலி வேறு.

கிடைக்குமிடம்—பண்டிட் நாராயணய்யங்கார்

நெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து மதுரை.

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை:—42.